Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 67 | உம்முடைய நியாயத்தீர்ப்புகள் அவன் பார்வைக்கு எட்டாமல் மிகவும் உயரமாயிருக்கிறது சங்.10:5 | டிசம்பர் 2021 No.12

நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்துகொள்ளுங்கள்

Be still and know that I am God

Thomas Reade

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையும் இருளுமாயிருந்தபோது சிருஷ்டிப்பின் தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். உடனே வெளிச்சம் உண்டாயிற்று ஆதி.1:13. தேவன் மாம்சமாகி இவ்வுலகில் வாழ்ந்த போது ஒரு முறை சீஷர்களோடு கடலில் படகின் மூலம் சென்று கொண்டிருந்தார். அப்போது பலத்த சுழல்காற்று உருவாகி படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதன்மேல் மோதியது. இயேசு "காற்றை அதட்டி கடலைப் பார்த்து இரையாதே அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று" மாற்.4:39. இன்று உலக வாழ்வில் கொந்தளிப்பால் அலைமோதிக் கொண்டிருக்கும் நிலையிலுள்ள ஜனங்களைப் பார்த்து அவர் கூறும் வார்த்தை, நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் என்பதாகும் சங்.46:10 இந்த வசனம் ஆத்தும இளைப்பாறுதலைத் தருகிறது.

வன்முறைகள் பெருகிவரும் இந்நாட்களில் மக்களின் முரட்டுத் தன்மையை அடக்கி, மனவேதனைகளை மாற்றி, முறிந்த ஆவிகளை அவர் அமைதிப்படுத்துகிறார். "ஒரு ஜனத்துக் கானாலும் ஒரு மனுஷனுக்கானாலும் அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்? அவர் தமது முகத்தை மறைத்தால் அவரைக் காண்கிறவன் யார்? யோபு.34:30.

உலகில் பல மாற்றங்களும் அசைவுகளும் ஏற்பட்டு சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தினாலும் 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்' என்ற விளம்பரம் நமக்கு எத்தனை இளைப்பாறுதலை அளிக்கிறது! நம்மைச் சுற்றியிருக்கும் ஆகாயம், கடல், மலை போன்ற இயற்கையின் சிருஷ்டிப்புகள் நமக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் ஒரு உண்மைக் கிறிஸ்தவன் இளைப்பாறுதலை தேவனில் மட்டுமே காணக்கூடும்.

மனித குலத்தின் சன்மார்க்க நெறியும், ஆவிக்குரிய நிலையும் சரிந்து கொண்டிருப்பதை கிறிஸ்தவ உலகம் உன்னிப்புடன் கவனிக்கிறது. எனவே வேத சத்தியங்களை எடுத்துரைக்கப் பாடுபடுகிறது. இது ஒன்றே விழுந்து போன உலகத்தைத் தூக்கி நிறுத்த முடியும். சுவிசேஷத்தின் எதிரிகளும், சமுதாயச் சட்டங்களை மீறி நடக்கிறவர்களும் அந்தகாரச் செயல்களில் விழிப்புடன் ஈடுபட்டிருக்கின்றனர். இருளுக்கும் ஒளிக்கும் போராட்டம் நடக்கிறது. அது பலத்ததாயிருந்தாலும், பரத்தினின்று வரும் இனிய மெல்லிய ஒலியைக் கேட்பதால் பயப்படாமல் முன்னேறக்கூடும். அந்த ஒலி : "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்பதாகும்.

ஆத்துமாவே மகிழ்ந்து களிகூரு, ஏனெனில் கர்த்தர் ஆட்சி செய்கிறார். அவர் மனதின் கொடிய அலைகளை அமைதியாக்குவார். உள்ளான புயலை அடக்குவார். உயிர்ப்பிக்கும் ஒலிக்கதிரை சோர்ந்துபோன இருதயத்தில் செலுத்துவார். அப்போது இருதயத்தில் அமைதலும் இனிய சமாதானமும் நிரம்பும். கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து அமர்ந்திருங்கள், அவர் தேவன்.

உலகமனைத்தையும் ஆளுகிறவரும், தேசங்களின் எதிர்காலத்தைத் தமது கரத்தில் வைத்திருப்பவரும், குடும்பங்கள், தனிநபர்கள் ஆகியோரின் நுண்ணிய கரிசனைகளை அறிந்து வழி நடத்துகிறவருமாகிய தேவன், நமது பிதாவும் நண்பருமாயிருந்து செயல்படுவது விசேஷித்த ஆறுதலன்றோ!

அவரது வல்லமை, ஞானம், அன்பு, உத்தமம், உண்மை ஆகிய வற்றையும் அவரையும் நாம் அறிய அறிய நாம் அவரது சிங்காசனத்துக்கு முன்பாக தாழ்மையுடனும் வணக்கத்துடனும் நம்பிக்கையுடனும் அன்புடனும் தலை குனிந்து வணங்குவோம்.

கிறிஸ்துவில் தேவனை அறிந்து கொள்வதும் அவரை உடன்படிக்கையின் தேவனாகக் கொள்வதும் இந்த புயல் நிறைந்த வாழ்வில் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள ஏதுவாகிறது. இந்த அறிவு இவ்வுலகின் கிளர்ச்சியான பகுதிகளிலிருந்து நம்மைத் தூரப்படுத்துகிறது. நமது ஆத்துமா அதிக சுயாதீனமாக சுவாசிக்கவும் அதின் வல்லமை முழுமையாகப் பெருகவும் கூடியதான உன்னத தூய இடத்திற்கு எடுத்துச் செல்லுகிறது. விசுவாசம் தேவனுடைய பரிபூரணத்தை பிரமிப்புடன் உற்றுநோக்குகிறது. நம்பிக்கை இப்பரிபூரணங்களின் நிறைவேறுதல்களின் எதிர்பார்ப்புகளில் நிலை நிற்கிறது. அன்பு இவைகளில் களிகூர்ந்து, ஆத்துமாவில் அவை சிறிது சிறிதாகச் செரிமானமடையச் செய்கிறது. பொறுமை அமைதியுடன் காத்திருக்கிறது. வாக்குப்பண்ணின தேவன் நிறைவேற்ற உண்மையுள்ளவர்

தெய்வீக சர்வாதிகாரம்

ஆத்துமாவே, இந்த வாய்ப்புகளின் கண்ணோட்டத்தில் தேவனை நம்புவதின் ஆசீர்வாதத்தைக் கற்றுக் கொள். அவர் மாறாதவர். யாதொரு வேற்றுமையின் நிழலும் அவரிடமில்லை (யாக்.1:17) அவருடைய வாக்குத்தத்தங்கள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன (2 கொரி.1:20) அவருடைய வழிகளெல்லாம் நியாயமும் சத்தியமுமானவைகள் (உபா.32:4) அவர் உங்களை விசாரிக்கிறவர் (1 பேது.5:7) ஒவ்வொரு சோதனையின் போதும் அமர்ந்திருந்து அவர் தேவனென்று அறிந்து கொள்ளுவோம்.

உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. ஆனால் தேவன் மாறாதவர். நான் மாறாதவர் (மல்.4:6) 'என் ஆலோசனை நிலைநிற்கும்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்' ஏசா.46:10 என்று அவர் உறுதிபட கூறியிருக்கிறார். நமது குறுகிய பார்வையில் அவரது திட்டங்கள் தடைபடுவது போல தோன்றலாம். துன்புறுத்துவோர் எழும்பி உற்சாகமான ஊழியக்காரரை அகற்றி விடலாம். மரணம் சிறப்பான பல ஊழியரை எடுத்துக் கொள்ளலாம். எதிர்பாராத சூழல்களால் சுவிசேஷத்தின் வளர்ச்சி தடைபடலாம். 'நான் மனிதர் கையில் விழாதிருப்பேனாக' என தாவீதைப் போல கூறவேண்டிய தருணங்கள் ஏற்படலாம் 2 சாமு.24:14. ஆனாலும் மனிதனுடைய கை ஓங்காது.

"கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார்" சங்.95:10 என்று தாவீது வெற்றி கீதம் பாடியிருக்கிறார். இது மீட்கப்பட்டவர்களின் வெற்றி கீதம். அல்லேலூயா சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார் வெளி.19:6.

தெய்வீக முன்னறிவும் அனுமதியுமின்றி எதுவும் நடைபெறுவதில்லை. சர்வவல்ல தேவன் முடிவை ஆரம்பத்திலிருந்தே பார்க்கிறார். அவரது செயல்களும் நடைமுறைகளும் நித்திய காலமாக அறியப்பட்டவை. அவரது நன்மை, நீதி, இரக்கம் ஆகியவை உறுதியும் நித்தியமுமாக இருக்கின்றன.

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

மணியாடர் அனுப்பும்போது, கீழே இருக்கும் மாதிரிபடி உங்கள் பதிவு எண்ணை கட்டாயம் எழுதுங்கள்.

Pr. Arputharaj E. VN 00980 M
Srivilliputhur - 626 138.
Phone : 9786xxxxxx

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

1. **வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.
3. உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.

இம்மாத பொன்னான சிந்தனை

நன்றியா? முறுமுறுப்பா?

ஒரு மனிதர் ஆண்டின் இறுதியில் தன்னுடைய டைரியில் எழுதத் தொடங்கினார். இது எனக்கு மிகுந்த துயரமான வருடம். இந்த ஆண்டில்தான் எனக்கு ஒரு பெரிய அறுவை சிகிட்சை நடந்தது. நான் நீண்டகாலம் படுக்கையில் இருந்தேன். எனக்கு 60 வயது நிறைவடைந்ததால் 30 ஆண்டுகளாக செய்துவந்த பணியிலிருந்து ஓய்வுபெற்றேன். இந்த ஆண்டில் நேர்ந்த என் தந்தையின் மரணம் எனக்கு பெரிய துக்கத்தைத் தந்தது. அதேபோல் என்னுடைய மகன் எதிர்பாராத கார் விபத்தில் சிக்கி நீண்ட நாட்கள் மருத்துவமனையில் இருந்தான். என்னுடைய வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான ஆண்டு இதுதான் என்று அவர் எழுதி முடித்துவிட்டு படுக்கைக்குச் சென்றார்.

சற்று நேரம் கழித்து அவருடைய மனைவி அறைக்குள் வந்தார். அந்த டைரி, அவருடைய கண்ணில்பட்டது. அவர் கடைசியாக எழுதியிருந்த அந்த பாகத்தைப் படித்துவிட்டு அதனருகில் :

இதுதான் எனக்கு நிறைவான ஆண்டு. பல ஆண்டுகளாக வலியில் என்னை வேதனைப்படுத்திய பித்தப்பை பிரச்சனையிலிருந்து அறுவை சிகிட்சையின் மூலம் சுகம் பெற தேவன் கிருபை செய்தார். என்னுடைய பணித்தளத்தில் 30 ஆண்டுகள் சிறப்பான வகையிலே பணியாற்றி ஓய்வுபெற தேவன் கிருபை செய்தார். 95 வயதுவரை என்னுடைய தகப்பனார் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து, எந்தவித கஷ்டத்தையும் மற்றவருக்குக் கொடுக்காமல் கர்த்தரிடம் செல்ல தேவன் கிருபை செய்தார். என்னுடைய மகனும் பெரிய விபத்தில் சிக்கி கார் நொறுங்கிப்போனாலும், பெரிய சேதம் இல்லாமல் தேவன் உயிர் பிழைக்கச் செய்தார். என் கர்த்தரை மனமார ஸ்தோத்தரிக்கிறேன் என்று எழுதிவைத்தார்.

ஆம், பிரியமானவர்களே! மேற்கண்ட சம்பவங்கள் ஒன்றுதான். ஆனால், அவர்களின் மனநிலையில் எத்தனை வித்தியாசம் பாருங்கள். தேவன் தனக்கு நன்றி சொல்லுகிறவர்களை அதிகமாக நேசிக்கிறார். இந்த 11 மாதங்கள் நீங்கள் நடந்துவந்த பாதைகளை சற்று நினைவுகூருங்கள். இந்த ஆண்டு பல தீமைகளை நீங்கள் சந்தித்திருக்கலாம். ஆனால், அவைகள் எல்லாவற்றின் நடுவிலும் தேவன் எத்தனை நன்மைகள் செய்திருக்கிறார் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அவைகள் ஒவ்வொன்றிற்கும் நன்றி சொல்ல மறவாதிருங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். **அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே** (சங்.103:2).

வாக்குத்தத்தம்

நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை யோவேல் 2:26.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2021 டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை அதிக நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும் துதிக்கிறேன்.

தேவனுடைய பிள்ளைகள் மிகவும் உதாரத்துவமாய் வங்கி வழியாகவும், தபாலிலும் அனுப்பிய அனைத்து காணிக்கைகளுக்காகவும் கர்த்தரை நன்றி நிறைந்த இருதயத்தோடு துதிக்கிறேன். **"விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப் பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்"** *2 கொரி.9:10.*

உங்களுக்கும் எங்கள் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். மகன் **சாமுவேல்** அலுவலக வளாகத்தில் விழுந்ததினால் மருத்துவர்கள் இரண்டு வாரம் படுக்கையில் (Bed rest) இருக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் ஒரு மாதத்திற்கு மேலாக படுக்கையில் இருக்கும் சூழ்நிலை ஏற்பட்டபடியால் உங்களுக்கு உடனே ரசீது அனுப்ப இயலாமல் போய்விட்டது.

கர்த்தருக்குச் சித்தமானால் டிசம்பர் மாத இறுதிக்குள் அனைவருக்கும் ரசீது அனுப்பப்படும். அதோடு நன்றி கடிதமும், சிலருக்கு ஒரு தபால் அட்டையும் அனுப்பப்படும். அதில் கடிதமாய் எழுதாமல், கீழ்காணும் விபரங்களை குறிப்பாய் நிரப்பி அனுப்புமாறு அதிக அன்பாய் கேட்கிறேன். உங்களுக்காக ஜெபிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

பெயர் :..... பிறந்த தேதி :.....

கணவர் / மனைவி..... பிறந்த தேதி:.....

திருமண நாள்:.....

பிள்ளைகள் : ..... பிறந்த நாள்:.....

.....

பேரப்பிள்ளைகள் ..... பிறந்த நாள்:.....

.....

விசேஷ ஜெபக்குறிப்பு :.....

.....

போன் : ..... வாட்ஸ்அப்:.....

"**வருகையின் தூதன்** எதற்காக, எந்த நோக்கத்தோடு அச்சிடப்படுகிறது என்பதை இயேசப்பாவின் வார்த்தைகளிலிருந்து எழுதி அனுப்புகிற **ஒருவருக்கு** கர்த்தருக்குச் சித்தமானால் டிசம்பர் மாதம் ஒரு அழகிய கொரியன் பிரின்ட் வேதாகமம் பரிசளிக்கப்படும்" என்று மார்ச் மாதம் 7-ம் பக்கம் 1-ம் காளத்தில் எழுதியிருந்தேன்.

ஒரு அன்புத் தாயார் மாத்திரம் பதில் எழுதியிருந்தார்கள். எனவே திரும்பவும் அக்டோபர் மாதம் 6-ம் பக்கம் 2-வது காளத்தில், "இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நீங்கள் ஆயத்தமா? அதற்காகவே தூதன் அச்சிடப்படுகிறது" என்ற பதிலையும் நானே எழுதியுள்ளேன். அவருடைய வருகையைக் குறித்து ஆண்டவர் இயேசு சுவிசேஷங்களில்

(5-ம் பக்கம் பார்க்க)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

எனவே எதிர்பாராத எதுவும் அவரது திட்டத்தில் உட்படுவதில்லை. அவரது சக்கரங்கள் நித்தியமாக சுழன்று கொண்டிருக்கின்றன. அதன் சுழற்சியிலிருந்து எவரும் தப்ப முடியாது. அவரது சித்தத்தின்படியான நித்திய திட்டங்கள் அவரது மகிமையில் முடிவடைகின்றன. அதற்கு மேலாகவோ தூரமாகவோ நாம் செல்ல முடியாது. 'நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும், அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்' வெளி.22:13.

மேகங்களும் அந்தகாரமும் சிங்காசனத்தைச் சூழ்ந்து அவரது பிரகாசமான தோற்றத்தை மறைத்தாலும், விசுவாசம் அந்தத் திரையை ஊடுருவி அந்தகாரக் காட்சிக்குள் இம்மானுவேலின் அரசாட்சியின் மேன்மையைக் காண்பிக்கும்.

விசுவாசத்தின் ஆசீர்வாதம்

உத்தம விசுவாச மார்க்கம் ஆசீர்வாதமானது. இவ்வுலகில் நாம் மிகப் பெரிய தேவனுடைய பிள்ளைகளாயிருப்பது எத்தனை சிறப்பான பாக்கியம். தெய்வீக உத்தரவின்றி எதுவும் நடைபெறாது. ரோமர் 8:28-ன் படி "..... தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்."

சாத்தான் கோபம் கொள்ளலாம். உலகம் முகத்தைச் சுளிக்கலாம். நமது எச்சரிக்கையைக் கடந்தும் எதுவும் நிகழலாம். ஆனாலும் தாழ்மையுள்ள விசுவாசி தன் ஆத்துமாவைக் காத்துக் கொள்ளுகிறான். அவனுடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது கொலோ.3:2 என்ற நம்பிக்கையுடன் காலமாகிய திரைச்சீலையின் வழியாக அவன் பார்க்கிறான். அந்தத் திரைச்சீலை நித்தியத்தின் மகிமைக்கு மேலாகத் தொங்குகிறது. அதற்குள் பிரவேசிக்கும் சந்தோஷமான எதிர்பார்ப்புடன் அவன் நீடிய பொறுமையுடன் சோதனைகளைச் சகிக்கிறான். அவன் உலக சந்தோஷத்தை அல்ல பரம இன்பங்களை இரட்சகரோடுள்ள உறவின் மூலம் பெற ஒரு பரதேசியைப் போல வாழுகிறான். அவன் நரகத்தையல்ல பரலோகத்தைச் தெரிந்து கொள்ளுகிறான். தேவ வசனத்தை ஒரு குழந்தை போன்ற எளிமையுடன் ஏற்றுக்கொள்கிறான். அதின்படி நடப்பதில் சந்தோஷப்படுகிறான்.

எல்லாவற்றிற்காகவும் தேவனை எதிர்பார்த்து அவரது வசனத்தில் மறைந்திருக்கும் மன்னாவைப் புசிக்கிறான். அவரது வாக்குத்தத்தங்கள் சத்தியமும் ஆறுதலும் நிறைந்தவை என்று கண்டு அவரைக் கன்மலையாகக் கொண்டு அவரது பாதுகாவலுக்குள் இளைப்பாறுகிறான்.

அவன் மகிமையான நாட்கள் வரவிருப்பதை அறிந்து, புயல் நிரம்பிய இரவில் அதைரியமடைவதில்லை அவனது திகிலைப் போக்க சர்வவல்ல பிதா கிருபையுடன் மெல்லிய குரலில், 'நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்' என்று அவர் பேசுவதை கேட்கிறபடியால் பரிபூரண சமாதானத் துடனிருக்கிறான்.

நம்பிக்கையின் முழுமை

ஆத்துமாவே, தைரியமாயிரு. மனிதருக்குப் பயப்பட வேண்டாம். தாவீதோடும் தூதரோடும் சேர்ந்து 'தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் அநுகூலமான துணையுமானவர்' சங். 46:1 என்று பாடுவோம்.

உலகத்தின் குழப்பங்களால் கலங்கவேண்டாம். தேசங்களின் தத்தளிப்பால் நடுங்கவேண்டாம். தேவனுக்குப் பயந்து அவரது வாக்குகளை விசுவாசிப்போம். அவரை நேசித்து அவருக்குச் சேவை செய்வோம். அப்போது எல்லாம் நன்மைக் கேதுவாகவும் அவரது மகிமைக்கேதுவாகவும் முடிவுறும்.

வாழ்வு விரைந்து செல்லுகிறது. நித்தியம் வாசலருகே வந்துவிட்டது. எனவே நித்தியத்துக்காக வாழ்வோம். காலத்தை அவர் பொறுப்பெடுத்துக் கொள்வார். அவரது சபையின் பாதுகாவல் அவரது நோக்கத்தின் நிறைவு ஆகியவற்றை அவர் கரத்தில் விட்டுவிடு. சிறுபிள்ளையைப் போல் அவரைப் பற்றிக் கொள். மேலானவைகளை நாடு. தீமையிலிருந்து விலக்கிப் பாதுகாக்கப்பட்டு முடிவில் பரதீசில் பாதுகாவலாக வைக்கப்படுவோம்.

பூரண சமாதானம்

Perfect Peace

Samuel L. Brengle (1860-1936)

"உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மை நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்" ஏசா.26:3.

இந்த வாக்குத்தத்தத்தை அனுபவமாக்கிக்கொள்ள நாம் ஒவ்வொரு வரும் நோக்கமாயிருக்க வேண்டும். இதற்காக நாம் செய்ய வேண்டிய எளிதான காரியம், நம் இருதயத்தை கர்த்தர்மேல் வைக்க வேண்டும். இந்த எளிதான காரியத்தை அநேக தேவ பிள்ளைகள் செய்யக் கூடாமலிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் தொழில், ஓய்வு, அந்தந்த நாட்களின் செய்தி, அரசியல், கல்வி, இசை மேலும் கர்த்தரின் பணி போன்றவற்றிற்கு கர்த்தரைவிட அதிக அக்கரை காட்டுகின்றனர்.

மேற்கூறிய பணிகள் கவனிக்கப்பட வேண்டியவைகளே. கர்த்தரின் பணியும் அதிகமாக கவனிக்கப்பட வேண்டியதுதான். ஏனெனில் அவரை நாம் நேசிக்கிறோம். அவர் ஆத்துமாக்களுக்காக மரித்தபடியால் ஆத்துமாக்களை அவர் வாஞ்சிக்கிறார்.

புதிதாக திருமணம் செய்த பெண், தன் கணவன் தூய்மையான இடத்தில் இருந்தாலும் தன் முழு கவனத்தையும் அவன் மீது செலுத்தி, அவனோடு தொடர்பு வைத்துக் கொள்ளுகிறாள். அது போலவே நாமும் பரம மணவாளனாகிய இயேசுவையே சிந்தித்து அவரோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். நமது இருதயங்கள் அவரது ஞானம், அன்பு, வல்லமை ஆகிய வற்றின் மீது முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும். அப்போது நாம் பூரண சமாதானத்தைப் பெற முடியும். அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.... அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

பலவேளைகளில் எனது பணியினை எப்படிச் செய்து முடிப்பேன் என்று நான் தடுமாறின வேளைகளில், இயேசு ஆரம்பத்திலிருந்தே முடிவு வரை எல்லாம் அறிகிறவர் என்றும் எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாகவே செய்கிறார் என்பதனை எண்ணி ஆறுதல் பெற்றிருக்கிறேன். நான் அவரை நேசித்து நம்பியிருக்கிறேன். அவரது ஞானம் முடிவில்லாதது. நாம் நமது புத்தியீனத்தால் அதிகக் குழப்படையும் போதும், அவர் தமது முழுமையான அன்பினாலும், எல்லையற்ற ஞானம் வல்லமை ஆகியவற்றாலும் நமது இருதய விருப்பங்களை நிறைவேற்றுகிறார். நமது இருதய விருப்பங்கள் தூய்மையாயிருக்க வேண்டும். 'அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை இரட்சிக்கிறார்' சங்.145:19.

இயேசு ஞானம் அன்பு ஆகியவற்றுடன் பரத்திலும் பூவிலுமுள்ள சகல அதிகாரங்களையும் நமக்கு வாக்களிக்கிறார் மத்.28:18. எனவே அவரது ஞான முள்ள ஆலோசனைகளும் உருக்கமான அன்பின் விருப்பங்களும் அவரது வாக்குகளை நிறைவேற்ற உறுதுணையாயிருக்கின்றன. அவர் ராஜாக்களின் இருதயங்களைத் திருப்பி, அவரது சித்தத்தைச் செய்யும்படி நடத்துகிறார். நாம் அவரை நம்பினால் அவரது உத்தம அன்பு நம்மை வழிநடத்தும்.

களிகூருங்கள்

நமது இருதயங்கள் கர்த்தருடைய மகிமையையும் சீயோனின் வாழ்வையும் காண வாஞ்சிக்கிறது. நாம் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்து இதனைப் பெற்றுக்கொள்வது எப்படி என்று வியப்புடன் காணப்படுகிறோம். அவரை நோக்கி நம்பிக்கையுடனிருந்தால் அவர் நாம் எதிர்பாராத மக்களைக் கொண்டு, நாம் கேட்டிராத விதங்களில் ஜெபத்தைக் கேட்டு நமது பொறுமைக்கு பதிலளிக்கிறார். எனவே சோதனைகள் மத்தியிலும் அவரை நம்பி அவரில் களிகூரும் போது தேவன் கிரியை செய்வதைக் காணலாம். ஏனெனில் ஆபத்துக் காலத்தில் அவர் அநுகூலமான துணை.

மிகவும் குழப்பமான காலங்களில் கடந்து செல்ல சிறிது காலம் தேவன்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

என்னை அனுமதித்திருக்கிறார். ஆனால் ஜெபத்தோடு அவருக்காகக் காத்திருக்கும் போது களிகூர்ந்திருந்தால் சோதனைகள் மூலம் இனிய ஆசீர்வாதங்களைப் பெற முடியும் என்பதை நான் என் வாழ்வில் நிரூபிக்க முடிந்தது. சோதனை கடந்து சென்றது. இறுதியாக கர்த்தருடைய பிரசன்னத்தின் இனிமை மட்டுமே மீதியானது. என் இருதயம் பூரண சமாதானத்தால் நிரம்பி வழிந்தது.

நாம் தாழ்மைப்படும்படி தேவன் இவற்றை நமக்குச் செய்கிறார். நமது சிந்தை நமது சேவையைவிட மேலானது என்று கண்டுகொள்ளவும், தரிசித்து அல்ல விசுவாசித்து நடப்பது மேலானது என்று போதிக்கவும், நம்பிக்கையின் மூலம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளும் படி உற்சாகப்படுத்தவும் இது ஏதுவாயிருக்கிறது.

நிர்விசாரமும் சமாதானமும்

நிர்விசாரம் என்பது சோம்பலால் பிறப்பது, சமாதானம் என்பது இடைவிடாமல் செயல்படும் விசுவாசத்திலிருந்து பிறப்பது. இந்த செயல்பாடு பூரணமானதும் வல்லமைமிக்கதுமாகும். இதன் மூலம் ஆயுதமற்றவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள். வாக்குத்தத்தங்களை பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள். பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள். சிலர் வாதிக்கப் பட்டார்கள் (எபி.11:33-35).

இந்த பலத்த விசுவாசம் அல்லது பூரண சமாதானத்தை தரும் விசுவாசத்தைப் பயிற்சிக்க நாம் பரிசுத்த ஆவியை நமது இருதயங்களில் பெற்றுக் கொண்டு அவரை ஒரு தாக்கமாகவோ ஒரு பண்பாகவோ எண்ணாமல் தேவனாகவே ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் ஒரு நபர். இயேசுவை அறிந்து கொள்ளவும் அவரது உள்ளத்தையும் சித்தத்தையும் புரிந்துகொள்ளவும் அவரது தொடர்ந்த பிரசன்னத்தை உணரவும் செய்வது அவரது கிரியை. இயேசு நம்மோடு எப்போதுமிருக்கிறார். நாம் அவரை விரும்புவது அவருக்குப் பிரியமானது. அந்த விருப்பம் அவர் மீது நமக்கு இருக்க வேண்டும்.

உலக பிரகாரமான தொழில், மாம்ச பெலவீனம், மனபெலவீனங்கள், நம்மைக் குறித்து மக்களுடைய தவறான தீர்ப்புகள், பிசாசின் தந்திரங்கள் போன்றவை நமது எண்ணங்களைக் கர்த்தரிடமிருந்து திருப்பி, அவரை மறக்கச் செய்யலாம். இந்நிலையில் ஒரே நாளில் நமது எண்ணம் அவரை விட்டு பலமுறை திரும்பலாம்.

இயேசுவையே நோக்க வேண்டும்

எனவே இயேசுவோடுள்ள உறவை நாம் வலுப்படுத்த வேண்டும். நமது எண்ணங்கள் சிதறும்போது அவற்றைத் திருப்ப வேண்டும். இதனை அமைதியாகவும் பொறுமையாகவும் செய்ய வேண்டும். பொறுமையின்மை ஆபத்தானது. அது நமது உள்ளான சமாதானத்தைக் கலைத்து ஆவியின் அமரிக்கையான குரலை அமிழ்த்தி தேவகிருபை நம்மை ஆளவும் இருதயங்களை ஆட்கொள்ளவும் கூடாதபடி தடை செய்யும்.

ஆனால் சாந்தத்தோடும், இருதய தாழ்மையோடும் தூய ஆவியானவர் நம்மில் வாசம் செய்ய அனுமதித்து அவரது சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தால் அவர் நமது இருதயங்களை பதினாயிரம் கவலைகளின் மத்தியிலும் தூய அமரிக்கையுடன் காத்துக்கொள்ளுவார்.

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" பிலி.4:6-7.

எப்போதும் பிரசன்னராயிருக்கும் நமது தேவனை நம்புவோம்

Trusting our ever present God

Rich Carmicheal

டென்னஸீ என்ற இடத்திலுள்ள குன்றுகள், மலைகள் நிறைந்த ஓரிடத்தினருகில் உறவினருடன் சில நாட்கள் தங்கியிருக்கும் வாய்ப்பை பெற்றேன். ஒரு நாள் காலையில் தியானத்திற்காக சங்கீதம் 90-ஐ படித்தேன். என் கண் எட்டும் தூரத்திலிருந்த மகிமையான குன்றுகள் மலைகள் யாவும் தோன்று முன்னதாகவே தேவன் பிரசன்னமாயிருந்தார். இன்றும் அவரது பிரசன்னம் இருந்து கொண்டுதானிருக்கிறது என்ற எண்ணம் வந்தது.

பின்பு எனது சிந்தனை 121-ம் சங்கீதத்திற்குச் சென்றது. வானத்தையும் பூமியையும் படைத்து, தமது வல்ல கரத்தால் மலைகளை உருவாக்கினவர் தம்மை நோக்கிப் பார்க்கிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவர். நித்திய நித்திய மாக வாழும் அவர் எப்போதும் நம் மத்தியில் பிரசன்னராயிருக்கிறார்.

அலைகள் உங்களைச் சுற்றிலுமாக இரைந்தாலும், அந்தகாரம் சூழ்ந்து கொண்டாலும் அவை எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் உத்தமராக உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் அவர் கரங்களுக்குள் உறுதியாயிருக்கிறீர்கள். அவரது இருதயத்திற்கருகில் அவர் பத்திரமாக வைத்துக் கொள்கிறார். அவர் உங்களைத் தூக்கிச் சுமப்பவர். மேகங்கள், இரவுகள் வழியாக பத்திரமாக கடந்து செல்லுகிறீர்கள் ஏசா.63:1, 54:10 ஆகிய வசனங்களை படித்துப் பார்ப்போம். அவரது அழைப்பை நம்புவோம். இளைப்பாறுதலையும் ஆறுதலையும் ஆத்துமா பெற்றுக் கொள்ளட்டும். அவரது நாமம் தேவன். அவரைச் சார்ந்து கொள்ளுங்கள். அவரது கோலும் தடியும் உங்களை தேற்றுவதாக. துன்ப காலங்களில் அவரது உத்தம வார்த்தைகள் உங்களை ஆறுதல்படுத்தட்டும்.

மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார் ஏசா.54:10. மலைகள் உண்டாக்கப் படுமுன்னதாகவே அவர் இருக்கிறார். மலைகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதும் அவர் நம்மோடிருக்கிறார். மலைகள் விலகிப் போனாலும் அவர் நம்மோடிருப்பார்.

46-ம் சங்கீதத்திலுள்ள அற்புதமான சத்தியங்களையும் கவனிப்போம் (படிக்க) அவர் அன்றும் இன்றும் என்றும் நம்மோடிருப்பவர். அவர் நமது அடைக்கலமும் ஆபத்துக்காலத்தில் அனுகூலமுமான துணையுமானவர்.

நாம் கடினப்பாதைகள் வழியாகக் கடந்து செல்லும்போது, இந்த சத்தியங்கள் ஆதரவாகவும் ஆறுதலாகவும் இருக்கின்றன. நீங்கள் அவரிடத்தில் திரும்பும்போது அவர் உத்தமரென்றும் உங்களைப் பாதுகாக்கிறவரென்றும் கண்டுகொள்வீர்கள். அவர் உங்களை பலப்படுத்தி உதவி செய்கிறவர். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே எபி.13:5. "பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப் போல் கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்" சங்.125:2. "ஜனங்களே எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமூகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றி விடுங்கள். தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார்" சங்.62:8.

பயப்படாதிருங்கள் நான் உங்களுக்குச் சகாயம் பண்ணுவேன்

Do not fear; I will help you *by Charles H. Spurgeon*

தேவன் நமக்கு அருளும் வாக்குத்தத்தம் "நான் உனக்குச் சகாயம் பண்ணுவேன்" என்பது ஏரே.41:10.

இந்த குறுகிய வாக்குத்தத்தத்தில் நான் அதிகமாகப் பிரியப்படுகிறேன். இது குறுகியதாயிருந்தாலும் இதன் பொருள் நீண்டது. இதனை எல்லாவிதத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். இது எல்லாப் புறங்களிலும் திரும்பக்கூடியதும், எல்லா வகைகளிலும் ஆசீர்வதிக்கக்கூடியதுமாகும். எந்த நிலையிலும் ஒரு தேவபிள்ளை இதனால் ஆசீர்வதிக்கப்படாமல் இருக்கவே முடியாது. பெலவீன முழங்கால்களை பலப்படுத்தும் கரங்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். அவைகள் உங்களுக்காக நீட்டப்பட்டிருக்கின்றன. தேவன் தாமே உங்களைப் பார்த்து : 'நான் உங்களுக்குச் சகாயம் பண்ணுவேன்' என்று சொல்லும் போது நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்.

யாக்கோபைப் போல போராடி ஜெபிக்காவிட்டாலும் அவர் சகாயம் பண்ணுவார். பாவத்தை மேற்கொள்ள முடியவில்லையா? அவர் உதவி செய்வார். உங்களால் கூடாத பாரமான சேவையில் ஈடுபட்டிருக்கிறீர்களா? அவரது உதவி உங்களுக்குக் கிட்டும். பாடுபடவோ தியாகம் பண்ணவோ, உழைக்கவோ, சகிக்கவோ அழைக்கப்படுகிறீர்களா? இந்த ஆறுதலான வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். நான் உனக்கு சகாயம் பண்ணுவேன்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

சொல்லிய உவமையை எனக்கு எழுதி ..... பரிசாக பெறமாட்டீர்களா? என்ற எனது கேள்விக்கு வாசகர்கள் எல்லா உவமைகளையும் பக்கம் பக்கமாய் எழுதியுள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்!

சரியான விடை : "**நடு ராத்திரியிலே : இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று**" மத். 25:6.

உவமை : மத்தேயு 25:1-13 வரை

எழுதின அனைவருக்கும் ஆறுதல் பரிசு அனுப்பப்படும். வழக்கம் போல வாசகருடைய கடிதங்களை கீழே அச்சிடுகிறேன்.

அன்பான வருகையின் தூதன் ஆசிரியர் ஏவல்லி தேவதாசன் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஸ்தோத்திரங்கள் பல.

நான் கொஞ்சம் இடைவெளிக்குப்பின் உங்கள் பத்திரிகையை பெற்று வருகிறேன். நன்றி. ஆவிக்குரிய ஆழமான கருத்துக்களை தெரிவிக்கும் உங்கள் ஊழியத்தின் பலனை நான் தெரிந்து பயன்படுத்தி ஆண்டவருக்குள் பரிசுத்தம் அடைகிறேன்.

நான் ஒரு University Retd. Professor. *வயது 81. வேதத்தில் சொல்லிய சத்தியங்களுக்கு கீழ்ப்படிந்து கர்த்தருக்குள் வளர்ந்து வருகிறேன். குடும்பத்தில் நான் மட்டும் இயேசுவை கிட்டி நெருங்கி சேர்ந்து பரிசுத்தமாகுதலை என் நோக்கமும் முடிவுமாக இருக்க செயல்படுவதால் அநேக பிரச்சனைகள் உண்டு. ஆனாலும் தேவன் உன்னை சுமப்பேன், தாங்குவேன், தப்புவிப்பேன் என்று வழிநடத்தி வருகிறார். நன்றியோடு துதிக்கிறேன். நான் அவர் விரும்பும் பரிசுத்தம் அடையவும் அவரை சந்திக்க ஆயத்தமாகவும் ஜெபியுங்கள். வயதின் காரணமாக உடல்நலம் அடிக்கடி துன்பம் தருவதுண்டு. மற்றவருக்கு தொல்லையில்லாமல் நல்ல சுகத்துடன் அவரை சந்திக்கும் வரை இருக்க ஜெபிக்க தயவாய் வேண்டுகிறேன்.*

இத்துடன் உங்கள் ஊழியத்திற்காக Rs.2000 Cheque *அனுப்பி உள்ளேன். பெற்றுக்கொள்ளுங்கள். வேணும் உங்கள் ஜெபம்.*

07.05.2021 **அன்புடன்,** C.N.S

கிறிஸ்துவிற்குள் அன்பு சகோதரர் அவர்களுக்கு,

எனது தந்தை (அ.சந்திரன்-68) தங்கள் பத்திரிகையை விரும்பி படிப்பது வழக்கம். அவர்கள் உணர்த்தப்பட்டதை underline *செய்து ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலப்பட்டதுண்டு. என்னையும் வாசிக்க சொல்லுவார்கள். ஆனால் நான் அசட்டை செய்துள்ளேன். இப்போது உணர்கிறேன். இந்த பத்திரிகையை எனது பெயரில் தான் வாங்குகிறார்கள், எனது பெயரில் தான் உங்களுக்கு கடிதம் எழுதுவார்கள்.*

எனது தந்தை சந்திரன் (68) 2021 மே 11-ம் தேதி corona *பாதிப்பால்* Madurai GH-*ல் உயிர் இழந்தார்கள். இப்போது தேவனுடைய ராஜ்யத்தில் உள்ளார்களா? என்று தேவனிடம் விசாரியுங்கள். தேவன் உங்களுக்கு வெளிப்படுத்தினால் எனக்கு தெரியப்படுத்துங்கள்.*

எனது தந்தையின் உடலை எவ்வளவு போராடியும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அன்றைய சூழ்நிலையில் உடலை புதைக்காமல் தகனிக்க வேண்டியதாயிற்று. இதனால் உயிர்த்தெழும் நாளில் பாதிப்பு வருமா? உயிர்த்தெழுதலின் போது எப்படியாக இருக்கும் என்பதனை குறித்து தாங்கள் எனக்கு விவரித்து எழுத வேண்டுகிறேன். இத்துடன் KMB Cheque (NO.000036)-*ஐ இணைத்துள்ளேன், அன்புடன் ஏற்றுக் கொள்ளுங்கள். நன்றி.*

அன்புடன், A.C.A

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதரன் அவர்களுக்கு ஸ்தோத்திரம்.

உங்களையும் உங்கள் குடும்பத்தின் பிள்ளைகளையும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். நான் தங்களுக்கு ரூ.5000 அனுப்பியவுடன் கடிதம் எழுத நினைத்தேன். ஆனால் முடியவில்லை. வயதாகிவிட்டதால் அதிகமாக எழுத முடியவில்லை. எனக்கும் 80 வயதாகப் போகிறது. எனக்குரிய வேலைகளை செய்வதற்கே சிரமப்படுகிறேன். அதனால் முடிகிறதில்லை. தங்கள் பத்திரிகையில் சில மாதங்களாகவே பொருளாதார நெருக்கடியால் பத்திரிகை அனுப்புவதில் சிரமப்படுகிறதை அறிந்துதான் செப்டம்பரில் பணம் அனுப்பினேன். ஜெபிக்கிறேன். என் மகள் குடும்பத்தில் சமாதானக் குறைவினால் கவலைப்படுகிறேன். அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். தங்கள் உபவாச ஜெபம் தொடர்ந்து நடைபெற ஜெபிக்கிறேன். தங்களுக்காகவும் தங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்கிறேன். **தூதன் செய்திகள் மூலமாகத்தான் முதலில் இரட்சிக்கப்பட்டேன்.** *1968-ல் தங்கள் தகப்பனார் S.தேவதாசன் அவர்கள் மேலூரில் நாங்கள் வசிக்கும் பகுதியில் ஒரு ஏழை ஊழியர் வைத்திருந்த கன்வென்ஷன் கூட்டத்தில் செய்தியளித்தார்கள். இவ்வளவு பெரிய ஊழியக்காரர் வந்திருக்கிறார் என்று வியந்தேன். இவரிடத்தில் இவ்வளவு தாழ்மை இருக்கிறதே என்று, என் வீட்டிலும் அழைத்து ஜெபிக்கச் சொன்னேன். அந்தப் பாக்கியமும் ஆசீர் வாதமும் எனக்குக் கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*

கர்த்தருக்குள் சகோதரி, 07.10.2021

2020 டிசம்பர் மாத பத்திரிகையின் தொடர்ச்சியாகவே 2021 டிசம்பர் மாத பத்திரிகையை அச்சிடுகிறேன்.

I. 2022-ம் ஆண்டு பத்திரிகை அனுப்ப

2017-ம் ஆண்டு தபால் சலுகை கிடைக்காது என்ற உடனேயே பத்திரிகைக்கு ஆண்டு சந்தா ரூபாய் 500 என்று அச்சிடுங்கள் என்று அலுவலகத்தில் கூறினார்கள், அப்படியே ஒரு மாதம் அச்சிடவும் செய்தார்கள்.

கடந்த டிசம்பர் மாத பத்திரிகையில் இவ்வாறு அச்சிட்டுள்ளேன் :

வருகையின் தூதன் *ஊழியங்களுக்காக தினந்தோறும் ஜெபியுங்கள், மாதந்தோறும் தாங்குங்கள்.*

வருகையின் தூதன் *ஊழியங்களுக்கு வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புவோர் குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.*

இந்த ஆசிரியர் கடிதத்தின் மேலே அச்சிடப்பட்டுள்ள அறிவிப்பை, கடந்த ஏப்ரல் மாதம் முதல், மாதந்தோறும் அச்சிடுகிறோம்.

ஆண்டவருக்குச் சித்தமானால் 2022 **ஏப்ரல் மாதம், புதிய முகவரி பட்டியல் அச்சிடுவோம்.** *உங்கள் முகவரியில் ஏதாவது மாறுதல்கள் செய்யப்பட வேண்டுமானால் தயவாய் உடனே தெரிவியுங்கள். உங்கள் பத்திரிகையில் ஒட்டப்பட்டிருக்கும் முகவரியில் மொபைல் எண் அச்சிடப்படாமலிருந்தால் அதையும் எங்களுக்கு தெரிவியுங்கள்.*

II. கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; .... இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தார் மத்தேயு 7:15,28.

அநேக கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள் மத்தேயு 24:11.

ஏனெனில் கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் மத்தேயு 24:24.

"ஆதலால் கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய தீர்க்கதரிசிகளாகிய இவர்கள் எல்லாருடைய வாயிலும் கட்டளையிட்டார்" 1 இராஜாக்கள் 22:23.

".....பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" வெளி.21:8.

உண்மையான ஊழியர்கள், தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர்கள் எப்படி இருப்பார்கள்

1. சாமுவேல்

அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேலர் அனைவரையும் நோக்கி :

..... நான் என் சிறுவயது முதல் இந்நாள்வரைக்கும் உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்து வந்தேன்.

இதோ, இருக்கிறேன் : கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம் பண்ணி வைத்தவருக்கு முன்பாகவும் என்னைக் குறித்து சாட்சி சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக் கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக் கொண்டேன்? யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாருக்கு இடுக்கண் செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக் கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள்; அப்படியானால் அதை உங்களுக்குத் திரும்ப கொடுப்பேன் என்றான் 1 சாமுவேல் 12:1-3.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

2. எலியா

அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர் தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் தங்கி யிருந்தான்.

காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியும் கொண்டு வந்தது; தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான் 1 இராஜா.17:5,6.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று, அவர்,

நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார் 1 இராஜா.17:8,9.

அப்பொழுது அவன் அவர்களை நோக்கி : உங்களுக்கு எதிர் பட்டு வந்து, இந்த வார்த்தைகளை உங்களிடத்தில் சொன்ன மனுஷன் எப்படிப்பட்டவன் என்று கேட்டான்.

அதற்கு அவர்கள் : அவன் மயிர் உடையைத் தரித்து, வார்க்கச்சையைத் தன் அரையிலே கட்டிக் கொண்டிருந்தான் என்றார்கள்; அப்பொழுது அவன் திஸ்பியனாகிய எலியா தான் என்று சொன்னான். 2 இராஜா 1-ம் அதிகாரம் 1 முதல் 8 வசனங்களை கண்டிப்பாய் வாசியுங்கள்.

3. எலிசா

அப்பொழுது அவன் (நாகமான்) தன் கூட்டத்தோ டெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் (எலிசா) திரும்பி வந்து, அவனுக்கு முன்பான நின்று : இதோ, இஸ்ர வேலிலிருக்கிற தேவனைத் தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்பொழுதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ள வேண்டும் என்றான்.

அதற்கு அவன் : நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்க வேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான். 2 இராஜா.5:15,16.

4. கேயாசி (எலிசாவின் வேலைக்காரன்)

பின்பு அவன் உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான்; கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன் : உமது அடியான் எங்கும் போக வில்லை என்றான்.

அப்பொழுது அவன் (எலிசா) இவனைப் பார்த்து : ..... பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடு களையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்கு கிறதற்கும் இது காலமா?

ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டு புறப்பட்டு போனான் 2 இராஜா.5:25-27.

5. யோவான்

இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக் கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமா யிருந்தது மத்தேயு 3:4.

6. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து

அதற்கு இயேசு : நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு; மனுஷ குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார் மத்தேயு 8:20.

7. அப்போஸ்தலனாகிய பவுல்

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாண மோ, நாசமோசமோ, பட்டயமோ?

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிற வராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே ரோமர் 8:36,37

..... நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.

மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டவன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.

பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்பு களிலும், பசியிலும், தாகத்திலும் அநேகமுறை உபவாசங்களி லும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் 2 கொரி.11:23-27.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப் பார்கள் 2 பேதுரு 2:1.

ஊழியக்காரர்கள் சொல்லுகிறதையும், அது நிறைவேறு கிறதா என்பதையும் சோதித்துப் பார்க்க வேண்டும் என்று ஆவியானவர் சொல்லுகிறார் வெளி.2:2.

III. காணிக்கைகளினால் தேவாலயம் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது லூக்கா 21:5

எனது ஆண்டவர் பழிக்கப்படுகிறார்; அவரது சபை அலட்சியம் பண்ணப் படுகிறது. இந்த இரட்டைக் காயத்தைக் காணும் நான் அமைதியாயிருக்க முடியுமோ? என் கையிலுள்ள பட்டயமாகிய பேனா சும்மாயிருக்குமோ?

- லியோனார்டு ரேவன்ஹில், இங்கிலாந்து

கடந்த ஆண்டு ஒரே ஒரு மாதம் மாத்திரம் இந்த **பண்டிகை** பற்றி மிகவும் விரிவாக எழுதினேன். **பண்டிகை கொண்டாடுவதால் உண்டாகும் தீமைகள்** பற்றியும் விவரித்திருந்தேன். "**நரக கெடு பாதாளம்**" என்ற செய்தி, ஒரு தேவனுடைய பிள்ளையை தொட்டதாக கேள்விபட்டேன். மற்றவர்கள் **வழக்கம்போல** பண்டிகை கொண்டாடி முடித்திருப்பீர்கள் என்று நினைக் கிறேன். காரியம் இப்படி இருக்கும்போது, இந்த ஆண்டும் இந்த **பண்டிகை** பற்றி எழுதுவானேன்? கர்த்தருக்கு ஸ்தோத்திரம், இந்த ஆண்டு இரண்டு மாதங்கள் இந்த பண்டிகைப் பற்றி எழுதியிருக்கிறேன்.

அன்பாகவே இருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் இந்த பூமியில் பிறந்தார் என்பது சரித்திர உண்மை. சென்னையில் இருந்து வெளியிடப் படும் "அழைப்பின் எதிரொலி" பத்திரிகையின் ஆசிரியர், வேறு எவருமே செய்யாத துணிச்சலான ஒரு காரியத்தைச் செய்திருக் கிறார். பத்திரிகையின் முன்பக்கத்தில் மாதா மாதம் இவ்வாறு அச்சிடப்படுகிறது :

Vol.XXVI *Year of our LORD Jesus Christ,* *October 2021*

டிசம்பர் 25 கிறிஸ்துமஸ் தினமானது எப்படி?

கிறிஸ்மஸ் என்ற வார்த்தை உலக கிறிஸ்தவர்களின் கூடுகை - Mass of Christ (Christ - Mass) என்ற வார்த்தையிலிருந்து மருவி வந்ததாகும். இயேசு இந்த நாளில்தான் பிறந்தார் என்று யாராலும் சொல்லமுடியாது. தேவன் வேதத்தில் அதை வெளிப் படுத்தவில்லை. பின் ஏன் டிசம்பர் 25-ஐ நாம் உலக முழுவதும் இயேசு பிறந்த தினமாக கொண்டாடுகிறோம். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆதி திருச் சபைகளின் வேதனைக் காலத்தை முடிவுக்கு கொண்டு வந்த ரோம மன்னரான கான்ஸ்டன்டைன் முதலாவது கிறிஸ்துமஸ் பண்டிகையை கி.பி.336-ல் டிசம்பர் 25-ல் கொண்டாடினார். முற்காலத்தில் பாகால் தேவதையான சூரிய தேவதையின் பண்டிகையை டிசம்பர் 25-ம் தேதி கொண்டாடுவதை நிறுத்திவிட்டு பின்னர் அதே தினத்தில் இயேசு பிறப்பைக் கொண்டாடி தான் கிறிஸ்துவின் மீது வைத்திருந்த பற்றையும், மிகுந்த பக்தியையும் அரச சட்டமாக்கி அதை வெளிப்படுத் தினார்.

"சீயோனின் சத்தம் ஊழியங்கள்" பத்திரிகை

பாபிலோனியர்களின் சூரிய கடவுளின் பிறந்த நாளாக கருதப்படும் டிசம்பர் 25-ம் தேதியினையே கிறிஸ்து பிறப்பின் தினமாகவும் கொண்டாடும்படி கிறிஸ்தவம் பணிக்கப்பட்டது. எத்தனை பெரிதான கலப்படம்.

"ஜாமக்காரன்" பத்திரிகை

சபை சரித்திரத்திலிருந்து ஒரு செய்தி

கி.பி.300 முதல் 600 வரையுள்ள காலகட்டத்தில் நடை பெற்ற ஒரு சம்பவம்.

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

இக்கால கட்டத்தில் ரோமப் பேரரசின் பிரசித்தி பெற்ற ஒரு படையாளியாக கான்ஸ்டன்டைன் காணப்பட்டார். அவருடைய தகப்பனார் மரிக்கும் வேளையில் கி.பி.306-ம் வருடத்தில் சக்கரவர்த்தியாக மாற்றப்பட்டார்.

ரோமின் கிழக்குப் பகுதிக்கு சக்கரவர்த்தியாக இருந்த இவர் மேற்குப் பகுதியின் சக்கரவர்த்தியாயிருந்த மேக்ஸன்டியஸ் என்பவரால் மிகவும் நெருக்கப்பட்டார். சோர்ந்து போன தன்னுடைய படையாளிகளை உற்சாகப்படுத்த விரும்பிய கான்ஸ்டன்டைன், தான் சொப்பனத்தில் ஒரு சிலுவையைக் கண்டதாகவும், "இதன் மூலம் வெற்றிகொள்" என்று ஒரு சத்தம் கேட்டதாகவும் படையாளிகளிடம் கூறினார்.

இதைக்கேட்டு புத்துணர்வு கொண்ட படையாளிகள் ரோமிற்கு வெளியே இருக்கும் மில்லியன் பிரிட்ஜ் என்னும் பகுதியில் மேற்கு ரோமப்பகுதி படையாளிகள் மேல் வெற்றி பெற்றனர்.

இந்தக் கான்ஸ்டன்டைன் கி.பி.313-ல் "த எடிக்ட் ஆப் டாலரேஷன்" (The Edict of Toleration) என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதின் மூலம் கிறிஸ்தவர்களுக்கு சுதந்தரமாகச் செயல்பட முடிந்தது. ஜனங்கள் கிறிஸ்தவர்களாக மாறுவது நாகரீகமாகவும் அந்தஸ்தாகவும் கருதப்பட்டது.

பொன் நாணயங்களும் வெள்ளையங்கிகளும் கிறிஸ்தவர்களாக மாறியவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இதனால் தேவனை அறியாதவர்களும் பாவத்தில் ஜீவித்தவர்களுமான ஆயிரமாயிரமான ஜனங்கள் கிறிஸ்தவ சபையில் சேர்ந்தனர்.

கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கும் வித்தியாசம் கண்டுகொள்ள முடியாத அளவிற்கு சபை பாழாக்கப்பட்டது.

Loraine Boettner லொரைன் பொயட்னர் என்ற பண்டிதர், கீழ்க்காணும் வழிபாடுகளை இக்கால கட்டத்தில் சபை அங்கீகரித்ததாகக் குறிப்பிட்டுள்ளார் :

1. **செத்துப்போனவர்களிடம் ஜெபித்தல் (கி.பி.300)**
2. **சிலுவை அடையாளம் உருவாக்கப்படுதல் (கி.பி.300)**
3. **புனிதர்களையும் தூதர்களையும் வழிபடுதல் (கி.பி.375)**
4. **பூசை வழிபாடு (கி.பி.394)**
5. **மரியாள் வழிபாடு (கி.பி.431)**
6. **மத ரீதியாக எண்ணெய் அபிஷேகம் செய்தல் (கி.பி.526) –** Doctrine of Unction
7. **உத்தரிப்பின் உபதேசம் (கி.பி.593)**

("அறுவடைக்களம்" பத்திரிகை, கர்நாடகா மாநிலத்தில் மிகச் சிறப்பாய் மிஷனெரி ஊழியம் செய்யும் ஸ்தாபனத்தின் மாத வெளியீடு)

கிறிஸ்மஸ்

டிசம்பர் 25-ம் தேதி அகில உலகத்திலும் கிறிஸ்தவ சமுதாயம் கொண்டாடும் இப்பண்டிகையின் சரித்திர பூர்வமான உண்மையை விசுவாசிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம்.

உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களில் பலர் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கும் போது, விசுவாசிகளுக்கும், நாமும் கூட கிறிஸ்துமஸ் கொண்டாடினால் என்ன? நமது ரட்சிப்பின் காரணராகிய கிறிஸ்துவின் பிறப்பைத் தானே கொண்டாடுகிறோம் என்ற எண்ணம் வரலாம். அக்கொண்டாட்டம் அவசியமா என்பதை இங்கு காண்போம்.

1. கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை வேதாகமத்தில் எந்த இடத்திலும் காணப்படாத ஒரு சொல்லாகும். இதை கிறிஸ்து + மாஸ் (Christ's Mass) என்று பொருள் கொள்ளலாம். மாஸ் என்ற சொல் ரோமன் கத்தோலிக்கர்கள் நடத்துகிற பூசையை அல்லது திருப்பலியைக் குறிக்கிறது. கிறிஸ்துமஸ் என்ற சொல்லுக்கு கிறிஸ்துவின் பிறப்பு என்று நாம் பொருள் கொள்வதற்கு எந்த ஒரு சொல்லகராதியோ (Dictionary) வரலாறோ இடங்கொடுப்பதில்லை.

2. கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும்படியோ அல்லது யாரும் கொண்டாடியதாகவோ பரிசுத்த வேதாகமத்தில் நாம் எந்த இடத்திலும் காண்பதில்லை. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று வாரத்தின் முதல் நாள் நாம் ஆசரிக்கும் கர்த்தரின் பந்தியைக் குறித்து நம் ஆண்டவர் கூறியிருக்கிறாரேயொழிய அவருடைய பிறப்பின் நாளை ஆசரிப்பது குறித்து எவ்விடத்திலும் கூறப்படவில்லை. கர்த்தர் கூறாத ஒன்றை நாம் ஆசரிப்பது அவருக்குப் பிரியமாயிருக்குமா?

3. டிசம்பர் மாதம் 25-ம் நாள் கிறிஸ்து பிறந்தார் என்று வேதபுத்தகத்தில் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது? அந்நிய தேவர்களை வணங்கி வந்த ரோமானியர்கள் டிசம்பர் 25-ம் நாளை சூரிய கடவுளின் பிறந்த நாளாக அனுசரித்தார்கள். அவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவ ஆரம்பித்த பின்பு அதே நாளை கிறிஸ்துமஸ் நாளாக மாற்றிக் கொண்டார்கள். நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷத்துக் கொள்ளுகிறான் என்று வசனம் கூறினாலும் கர்த்தருடைய பின்னணியில்லாத, அவர் கட்டளையிடாத ஒரு நாளை விசேஷித்துக் கொள்வது அவருக்கு மகிமையளிக்காது.

4. அடுத்து கிறிஸ்துமஸ் தாத்தாவைப் பற்றிப் பார்ப்போம். செயின்ட் நிக்கோலஸ் என்பவர் 4-ம் நூற்றாண்டில் பிஷப்பாக இருந்தார். அவர் பிரபலமானவராகவும், குழந்தைகளின் நண்பராகவும் இருந்தார். இவர்தான் நாளடைவில் சான்டா கிளாஸ் என்று சொல்லப்படும் கிறிஸ்துமஸ் தாத்தாவாக மாறினார்.

5. இறந்து போன தனது கணவனாகிய நிம்ரோது அவனது ஒவ்வொரு பிறந்த நாளன்றும் ஒருவகை மரத்தின் மீது பரிசுகளை வைத்துச் செல்வான் என்பது அவனது மனைவியாகிய செமிராமிஸின் நம்பிக்கை. சூரியக்கடவுளாக மாறிய நிம்ரோதின் பிறந்த நாள் டிசம்பர் 25. கிறிஸ்துமஸ் மரம் என்றால் என்ன என்பது இப்போது நமக்கு புரிகிறதல்லவா?

("ஸ்தானாபதி" பத்திரிகை ஒரு சபைப் பிரிவினருடைய மாத வெளியீடு, துவங்கிய ஆண்டு 1951)

எதற்காக சந்தோஷப்படுகிறீர்கள்?

சென்னை பட்டணத்தில் ஒரு ECI ஆலயம் இடிக்கப்பட்டதை வாசகர் அறிவீர்கள். தினசரி செய்தி தாளில் வாசித்த நான் சென்னையிலுள்ள எனது போதக நண்பரிடம் தொலை பேசி வழியாக விசாரித்தேன். அவர் மறுமொழியாக 'எந்த சர்ச்' என்று என்னிடம் கேட்டார். இவ்வளவு பெரிய காரியம் சென்னையில் நடந்திருக்கிறது, எனது நண்பருக்கு தெரிய வில்லையே என்று ஆதங்கப்பட்டேன்; அவரோ பிரதியுத்தரமாக 'ஏராளமான ஆலயங்கள் இடிக்கப்படுகிறதே, நீங்கள் எந்த ஆலயத்தைக் கேட்கிறீர்கள்' என்றார்.

எனக்கு மிகவும் அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, டெல்கியில் இடிக்கப்பட்ட ஒரு ஆலயம்தான் உங்களுக்குத் தெரியும், ஆனால் உண்மை என்ன? ஏராளமான ஆலயங்கள் இடிக்கப்படுகிறது. தீ வைத்து எரிக்கப்படுகிறது. தேவனுடைய ஊழியர்கள் குடும்பமாய் தாக்கப்படுகிறார்கள், கைது செய்யப்படுகிறார்கள், சிறையில் குடும்பமாய் அடைக்கப்படுகிறார்கள்.

எதற்காக சந்தோஷப்பட வேண்டும்?

"..... ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும், ... ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது" எஸ்தர் 3:13.

எஸ்தர் "**மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து**" உபவாசம் பண்ணினாள் எஸ்தர் 4:16.

"..... யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பினார்களோ; அந்நாளில் தானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்குக் **காரியம் மாறுதலாய் முடிந்தது**" எஸ்தர் 9:1.

ஆகையால் "ஆதார் மாதத்தின் பதின்மூன்றாந் தேதியிலே இப்படிச் செய்து, பதினாலாந்தேதியில் இளைப்பாறி, **அதை விருந்துண்டு சந்தோஷப்படுகிற பண்டிகை நாளாக்கினார்கள்**" எஸ்தர் 9:17.

பண்டிகை கொண்டாடாத மக்கள் இருக்கிறார்களா?

ஆம், இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சில சபை பிரிவினர் இந்த பண்டிகையை கொண்டாடுவதில்லை. ரோமர் 14-ம் அதிகாரம் பண்டிகையை பற்றினது அல்ல புசிக்கிறதை பற்றினது ஆகும்.

டிசம்பர் 25 பண்டிகை கொண்டாடுவதினால் உண்டாகும் தீமைகள்

1. கிறிஸ்தவர்களின் **காணிக்கைகளினால்** தேவாலயங்கள் அலங்கரிக்கப்படுகிறது. ஆவிக்குரிய சபைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

2. கடைத்தெருக்கள் வண்ணமயமான நட்சத்திரங்களாலும், குடில், கிறிஸ்துமஸ் தாத்தா டிரஸ், கிறிஸ்துமஸ் மரம், அலங்கரிப்புக்கு தேவையான பொருட்களால் **வியாபாரம்** படுஜோராக நடக்கிறது.

3. கடந்த ஆண்டு எழுதினது போல ஜவுளி கடைகள் **கிறிஸ்தவர்களால்** நிரம்பி வழிகிறது.

4. இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்க செலவழிக்கப்பட வேண்டிய **கோடிக்கணக்கான கிறிஸ்தவர்களின் பணம்** பட்டாசுக்காக கிறிஸ்தவர்களல்லாதவர்களுடைய கைகளில் போய் சேருகிறது.

5. பண்டிகையை முன்னிட்டு சில நாட்கள் இறைச்சி கடைகளில் **கிறிஸ்தவர்களின் கூட்டம்** அலைமோதுகிறது.

எனக்கு அருமையான விசுவாசியே, உடன் ஊழியரே,

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது ரோமர் 14:17.

கவனியுங்கள், தேவனுடைய வசனம் இந்த தவறான பண்டிகைக்கு முற்றுபுள்ளி வைக்கிறது.

"ஆகையால் இதுமுதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒரு போதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" 2 கொரி.5:16.

"Wherefore henceforth know we no man after the flesh; yea, though we have known Christ after the flesh, Yet now henceforth know we him no more"

எனது அனுபவம்

மிகச்சிறந்த ஊழியக்காரருக்கு (பாஸ்டர் S.தேவதாசன்) மகனாக பிறந்தும், இங்கிலாந்தின் மிகச் சிறந்த ஊழியக் காரரும், அந்த நாட்களிலேயே சுமார் 40,000 மைல்கள் பிரயாணம் பண்ணி ஊழியம் செய்தவரின் (போதகர் ஜாண் வெஸ்லி) பெயரை சற்றே மாற்றி, அதிகாலையில் நான் பிறந்த தினால், டாண் வெஸ்லி என்று எனது தகப்பனாராலே பெயரிடப்பட்டும் **நான் துன்மார்க்கனாய் ஜீவித்தேன்.**

ஒரு நாள் இரவு, எல்லா பாவங்களையும் ஒரே இரவில் செய்தும், சமாதானமும், நிம்மதியும் அற்றவனாக வீடு வந்து சேர்ந்தேன். ஆவியானவர் பாவ உணர்வை தந்தார். எந்த ஒரு மனிதரின் ஆலோசனையோ, தூண்டுதலோ இல்லாமல் பாவ உணர்வால் உந்தப்பட்டு, "**இயேசுவே நான் பாவி, இயேசுவே நான் பாவி**" என்று கதறினேன்.

காலையில் கண் விழித்தேன், நான் மறுபடி பிறந்திருந்தேன், என் வாழ்க்கை மாறினது. இன்றைக்கு சென்னையில் ஊழியம் செய்யும் எனது நண்பரின் **நற்செய்தி ஜெபக்குழு**-வில் இணைந்தேன். நானும், அன்று அந்த ஜெபக்குழுவில் இருந்த நண்பர்களில் சிலரும் டிசம்பர் 25-ம் தேதி உபவாசித்து, கண்ணீர் சிந்தி ஜெபித்தோம்.

நீங்களும், தனியாக, குடும்பமாக, குழுவாக உபவாசித்து ஜெபிக்கலாம்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிறவர்கள், தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்
9489740295, 9543221008

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

புகழும் வேண்டாமே
பெயரும் வேண்டாமே
ஆத்துமாக்களைத் தாருமே
இந்தியாவைத் தாருமே
கோடி கோடி மக்களுண்டு
இந்த தேசம் இயேசுவை காணட்டும்

கி.மு., கி.பி.

கிறிஸ்துவுக்கு முன் நான் எழுதின கிறிஸ்மஸ் பாடல்களை ஒரு காசட் ஆக வெளியிட்டிருந்தேன். அதன் பெயர்

Season's Songs

அதில் நான்கு வரிகளை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன் :

கேரூபீன்கள் ஏகமாய்
மேக மீதில் பாடினார்
வான கானம் கேட்டதால்
இயேசு பாலன் தூங்கினார்

கிறிஸ்துவுக்கு பின் நான் எழுதின பாடல்களை இரண்டு காசட் ஆக வெளியிட்டிருந்தேன்.

1. Spiritual Songs
2. Sacred Songs

அதில் ஒரு பாடலின் சில வரிகளை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன் :

என் கண்ணீரை காணும் தேவன்
என்னை என்றும் நடத்துவார்
நான் நம்பின நல்ல தேவன்
நன்மையாவும் நல்குவார்

என் தேவன் நல்லவர்
மாராவை மாற்றிடுவார்
மாறாத வாக்குகளை
எந்நாளும் காத்திடுவார்

மாரா என்றால் கசப்பு யாத்.15:33.

இதுதான் உண்மையான கி.மு., கி.பி., அனுபவம்

எழுப்புதலுக்காக இதய கதறல் 2022
Heart cry for Revival 2022

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	08.12.22 Saturday	St. Johns C.S.I மலைக்கோடி, Vellore
பெப்ரவரி	12.02.22 Saturday	Church of God Srivilliputhur
மார்ச்		
ஏப்ரல்		
மே	14.05.22 Saturday	A.G. Church,Vettuvenni Martandam
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்	15.08.22 Monday	Zion Prayer House Villivakkam, Chennai
செப்டம்பர்	09.09.22 Friday	Jesus Cares Assembly Anna Nager, Chennai
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

நாம் கடினப்பாதைகள் வழியாகக் கடந்து செல்லும்போது, இந்த **சத்தியங்கள்** ஆதரவாகவும் ஆறுதலாகவும் இருக்கின்றன.

நம்மைச் சுற்றியிருக்கும் ஆகாயம், கடல், மலை போன்ற இயற்கையின் சிருஷ்டிப்புகள் நமக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் ஒரு உண்மைக் கிறிஸ்தவன் இளைப்பாறுதலை **தேவனில்** மட்டுமே காணக்கூடும்.

மனித குலத்தின் சன்மார்க்க நெறியும், ஆவிக்குரிய நிலையும் சரிந்து கொண்டிருப்பதை கிறிஸ்தவ உலகம் உன்னிப்புடன் கவனிக்கிறது.

அலைகள் உங்களைச் சுற்றிலுமாக இரைந்தாலும், அந்தகாரம் சூழ்ந்து கொண்டாலும் அவை எல்லாவற்றிற்கும் மேலாக **தேவன்** உத்தமராக உட்கார்ந்திருக்கிறார்.

இந்தியாவில் **சுவிசேஷம்** அறிவிக்க செலவழிக்கப்பட வேண்டிய கோடிக் கணக்கான கிறிஸ்தவர்களின் பணம் பட்டாசுக்காக கிறிஸ்தவர்களல்லாத வர்களுடைய கைகளில் போய் சேருகிறது.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason